நாங்கள் எங்கள் வரலாற்றை எழுதவில்லை. பாரம்பரியம் என்பது பேச்சோடு நின்று விடுகிறது. நாங்கள் எதையுமே பேணிப்பாதுகாப்பதில்லை. மன்னன் சாஜஹான் காலையில் என்ன உணவு அருந்தினான் என்று தொடங்கி அத்தனையும் பதிவு செய்யப்பட்டன என்று ஒரு பத்திரிகையாளரான நண்பர் சொன்னார். அந்தளவு இல்லையென்றாலும் எங்கள் வாழ்வு, எங்கள் மக்கள், எங்கள் கலைஞர்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும். பதிவு செய்யப்படவேண்டும்.

இந்த நோக்குடன் "தாய்வீடு" பத்திரிகை எங்கள் ஈழத்து மண்ணின் கிராமங்களில், ஊர்களில் வாழ்ந்த பிரபலமடைந்தவர்களுடன், தெரியப்படாமல் போய்விட்ட எங்கள் கலைஞர்களைப் பற்றியும் எழுதும்படி வேண்டுகோள் விடுக்கிறது. கட்டுரைகளை சுருக்கமாக, எழுதி அனுப்புங்கள். களம், 'தாய்வீடு' தரக் காத்திருக்கிறது. கருத்து உங்களுடையது. கட்டுரைகளை செதுக்கி சொற்சித்திரங்களாக்கும் பொறுப்பு எங்களுடையது.

*K.S. பாலச்சந்திரன்*

## இது ஓர் ஈழத்துக் கலைஞர்களின் பதிவுத் தொடர்...

# ஆழத்து முத்துக்கள் 01

# உடப்பு பெரி. சோமாஸ்கந்தர்

இந்த கலைஞரைப்பற்றி எழுதப்புறப்படும் போது இவரது ஊரைப்பற்றி சொல்லித்தானாக வேண்டும். இலங்கையின் மேற்குப் புறத்தே புத்தளம் மாவட்டத்தில், சூழவர சிங்கள ஊர்கள் சூழந்திருக்க, தமிழையும், தங்கள் தனித்தன்மையையும் பேணிக்கொண்டு எங்கள் பாரம்பரியக்கலைகளான கூத்து, வில்லுப்பாட்டு, கரகம் போன்றவற்றுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அழகிய தமிழ்ச் சிற்றூர் இது. உடப்பு அல்லது உடப்பூர் என்று இதன் பெயர் வருவதற்கான காரணம், மழைக்காலங்களில் பெருக்கெடுத்துப்பாயும் உப்புநீரேரியின் நீரை வாய்க்கால் வெட்டி இந்து மகாசமுத்திரத்தில் கலக்கவிடுவதினால் 'உடைப்பு' என்பது பெயராகி, உடப்பு என்று மருவியிருக்கலாம் என்கிறார்கள்.

கடலோர தென்னைகளும், கோயில்களும், குச்சொழுங்கைகளும், பாடசாலைகளும், கள்ளம் கபடமற்ற கிராமியத்தன்டையுடைய மக்களும் எங்கள் கிராமமொன்றில் திரியும் அனுபவத்தை பல ஆண்டுகளுக்குமுன் எனக்கு தந்திருக்கிறது.

17ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவின் ராமேஸ்வரம் பகுதியில் இருந்து அங்கு ஆண்ட மன்னவனின் கொடுமைக்கு அஞ்சி, இம் மக்கள் இரவோடிரவாக குடிபெயர்ந்து இலங்கைக்கு வந்து நன்னீர் இலகுவாக கிடைக்கும் பகுதியாக உடப்புவைத் தெர்ந்தெடுத்து இங்கே வாழத்தொடங்கினார்கள் என்று ஒரு ஐதீகக்கதை உண்டு. திரௌபதியை வழிபடும் இந்த ஊரில் பெண்களே அதிகம் என்று ஒரு குறிப்பு கூறுகிறது. மகாபாரக்கதையை அடிப்படையாக்கொண்டு உடப்பு திரௌபதியம்மன் ஆலயத்தில்



ஆவணி மாதக்காலத்தில் 18 நாட்களாக நடை பெறும் விழாவும், அதில் முக்கிய அம்சமாக ஊரின் பெரும்பான்மையானவர்கள் கலந்து கொள்ளும் 'தீமிதிப்பு' விழாவும் மெய்சிலிர்க்க வைக்கும் நிகழ்வுகளாகும்.

இந்த மண்ணிலே பிறந்து, வெளியுலகிற்கு அறிமுகமான கலைஞர்களில் முக்கியமானவர் உடப்பு பெரி. சோமாஸ்கந்தர் என்ற வில்லிசைக்கலைஞர். ஆசிரியராகவும், அதிபராகவும் பணியாற்றிய இவர், மலையகத்தில் ராகல என்ற இடத்தில் தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் தனது முதலாவது வில்லிசை நிகழ்ச்சியை நடத்தி, தொடர்ந்து 40 ஆண்டுகளாக ஏறக்குறைய 2,000 நிகழ்ச்சிகளை இலங்கையிலும், சிங்கப்பூர், மலேசியா நாடுகளிலும் நடத்தியிருக்கிறார் என்று அறிகிறோம். சமயகுரவர்கள், மகாபாரதம், இராமாயணம், முகம்மது நபி, இயேசு, காந்திமகான் கதை என்பவை இவர் வில்லுப்பாட்டில் இடம்பெற்றன. பல விருதுகளை அவ்வப்போது பெற்ற இவர் 1997ம் ஆண்டில் இலங்கை அரசின் கலாபூஷணம் விருதைப் பெற்றிருக்கிறார்.

ஆரம்பத்தில் நகைச்சுவை நடிகனாக அறிமுகமாகி பின்னர் நாடகாசிரியராக, நெறியாளராக, ஒப்பனைக்கலைஞராக விளங்கி உடப்பு நாடகத்துறைக்கு புதுப்பாய்ச்சலை உருவாக்கியவர் என்று இவரைப்பற்றி, உடப்புவைச் சேர்ந்த கவிஞரும், பத்திரிகையாளருமான வீரசொக்கன் அவர்கள் 'மல்லிகையில்' குறிப்பிட்டிருக்கிறார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் காலத்தில் பெரி.சோமாஸ்கந்தர் அவர்கள் "உடப்பின் பாரம்பரியம்" என்ற கட்டுரைத்தொகுதியை எழுதியிருக்கிறார். திரௌபதையம்மன் ஆலய விழாவின்போது பாடப்படும் பாரதகதையினை நாடகங்களாக நடித்ததாலும், அதன் பாடல்களை பாடிய பரிச்சியத்தினாலும் வில்லுப் பாட்டிலே இவரது பாடல்கள் தனித்தன்மையுடன், மிக இனிமையான சந்தத்துடன் விளங்கின. அத்தோடு சிறந்த பேச்சுவன்மை உடையவராகவும் இருந்திருக்கிறார். 2003ம் ஆண்டில் காலமான இவர், உடப்பு என்ற அழகிய தமிழ்க்கிராமத்தை பலரும் அறியப் பண்ணியவர். கொழும்பில் முகத்துவாரப் பகுதியில் ஒரு ஆலயத்திருவிழாவில், இரவு நேர சீதளக்காற்றில் சிலிர்த்துக்கொண்டு இவரது தெம்மாங்கு, சிந்துநடையில் அமைந்த இனிய பாடல்களை கேட்ட ஞாபகம் வருகிறது.



ksbala@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

www.thaiveedu.com